வங்கியிடம் உதவிபெற்று திட்டங்களை செய்து வருகிறோம். ஒரு சில தொழில் அதிபர்களிடம் நன்கொடை வாங்கி செய்வதால் புண்ணியம் ஏற்பட்டு விடாது.

திரு. வி. பி. சிந்தன்: தலைவர் அவர்களே, சென்னைக்கு புறநகரப் பகுதியிலிருந்துதான் தண்ணீர் வருகிறது. குறிப்பாக ரெட்ஹில்ஸ் பகுதியிலிருந்து வருகிறது. ஆனால் அந்த செங் குன்றம் பகுதி மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக்கவில்லை. அவர் களுக்கு ஏதாவது ஒரு திட்டத்தைப் போட்டு தண்ணீர் வழங்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, தற் போது சென்னையின் எல்லாப் பகுதிகளுக்குமே செங்குன்றம் பகுதியில் இருந்துதான் தண்ணீர் வருகிறது. அந்தப்பகுதி மக்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அவர்களுக்கு வேண்டுமானால் ஆழ் துளை கிணறுகளைப் போட்டு தண்ணீர் தர ஏற்பாடு செய்யலாம்.

நாகர்கோயில் நகராட்சியில் பாதாளச் சாக்கடை.

324—(*வினா எண் 9135) **திரு. எப். எம். இராசரத்தினம்**: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடை அமைக்க அரசிடம் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) ஆம்.

(ஆ) நகார்கோவில் நகராட்சிக்குப் பாதாளச் சாக்கடைத் திட்டம் ரூ. 930 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. திட்ட பராமரிப்புச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 32.5 இலட்சம் ஆகும். நகராட்சியின் நிதி நிலைமையைக் கருதி இத்திட்டத்தை ஏற்க நாகர்கோவில் நகராட்சி முன்வரவில்லை ஏனைய நக ராட்சிகளிலும் பெரும் முதலீடு தேவைப்படும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களை ஏற்பதில் இந்நிலையே உள்ளது. அரசு

1987 ஏப்ரல் 7]

இப்பொருள் பற்றி ஆய்வு செய்து, உள்ளாட்சி மன்றங்களின் நிதி நிலைக்கேற்ப தக்க நிதியுதவி செய்யும் வழிமுறைகளை வகுக்கும். அதனடிப்படையில் நாகர்கோவில் பாதாளச்சாக்கடைத் திட்டம் மேற்கொள்ளப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய தென்கோடி பகுதியின் தலைநகரமாக இருக்கிற நாகர்கோவில் நகராட்சியின் முக்கியத் துவத்தை உணர்ந்து, அந்த நகராட்சி மூன் வராமல், ஏற்றுக் கொள்ளாமல் காலதாமதப் படுத்தினாலும், உலக வங்கியின் உதவியோடு அந்தத் திட்டத்தை நிறைவேற்றும் முயற்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே அந்த முயற்சியிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. 5 பெரும் திட்டங்களை உலக வங்கியின் முன் மத்திய அரசின் மூலமாக சமர்ப்பித்திருக்கிறோம். அதில் நாகர்கோவில் இந்தியாவின் தென்கோடி மாவட்டத் தலைநகர் என்ற முறையில், அந்தத் திட்டத்தையும் சேர்த்து அனுமதிக்கு அனுப்பப்பட் டிருக்கிறது.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்தத் திட்டத்திற்கு திருத்திய மதிப்பீடு ஏதேனும் அளிக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். உலக வங்கியின் உதவி கோரி மத்திய அரசிடம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மத்திய அரசு அனுமதி அளிக்குமேயானால் திருத்திய மதிப்பீடு பற்றி யோசிக்கலாம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 4 ஆண்டுகளுக்கு முன்னால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் முன்னிலையில் சேலம் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடந்தது. இப் போது அதற்கு போதுமான நிலம் கிடைக்கவில்லை என்பதால் நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். பர்ன் அன்ட் கம்பெனி கொடுத்திருக்கும் நிலத்தை உபயோகப்படுத்தி, இந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற அரசு முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அது பற்றி தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில் பொது மக்களுடைய சுகாதாரத்தோடு சம்பந்தப்பட்ட முக்கியமான விஷயம் என்ற முறையில், நிதிப் பற்றாக்குறை உள்ள மாநக ராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும், மாநில அரசு நிதி உதவி அளிக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, நிதியை உலக வங்கியிடமிருந்தும் மத்திய அரசிடமிருந்தும் தான் பெற்றுத் தருகிற ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக் கிறோம். குறிப்பாக மாவட்டத் தலைநகரங்களாக இருக்கிற நகராட்சிகளுக்கு முன்னுரிமைத் தர வேண்டுமென்ற எண்ணம் இருக்கிறது. அந்த வகையிலே தான் சேலம், நாகர்கோவில் போன்ற நகரங்கள் வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தம்ப கோணம் பகுதியை 1953-ம் ஆண்டிலே ஆறு பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியிலே மட்டும் பாதாள சாக்கடைத் திட்டம் . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தனிக்கேள்வி போடவும்.

திரு. கி. கிருஷ்ணமூர்த்தி: தலைவர் அவர்களே, தயவு செய்து அனுமதிக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் கேள்வியை எழுதிக் கொடுங்கள்; அனுமதித்து, நாளைக்கே போடச் சொல் கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டங்கள் பல பகுதிகளில் துவங்கப் பட்டு வேலைகள் அரைகுறையாக முடிக்கப்படாமல் இருக் கின்றன. அப்படி இருப்பவைகள் எந்தெந்த ஊர்களில் இருக் கின்றன என்பதைக் கண்டறிந்து, அந்தமாதிரி இடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டங்களை முடிப்பதற்கு அரசு நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

1937 எப்ரல் 7]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, எந்த ஊரில் அப்படி இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக்கொடுப்பார்களானால் அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆ. பிரேம்குமார்: தலைவர் அவர்களே, பாதாள சாக்கடைத் திட்டம் நகராட்சியின் வருமானம் அடிப்படையிலும், அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் தொகையின் அடிப்படையிலும் அமைக்கப்படுகிறதா? இத்திட்டத்தை எடுத்துக் கொள்வதற்கு வேண்டிய முக்கியமான தேவைகள் என்னென்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் விளக்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையிலும், நகராட்சியின் வருமானம் அடிப்படையிலும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் வகுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

திரு. ஜி. கே. பாரதி: தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தில் வீடுகளுக்கு இணைப்பு கொடுப்பதில் முறைகேடுகள் நடப்பதாக தமிழக அரசுக்கு புகார்கள் வந்திருக்கின்றனவா? அப்படியானால் அவற்றின் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார்கள் தற்போது இல்லை.

மயிலாடுதுறையில் பாதாள சாக்கடை

325—(*வினா எண் 9783) **திரு. மு. தங்கமணி:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மயிலாடுதுறை நகருக்கு பாதாள சாக்கடைத் திட்டம் கொண்டுவரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா? ,

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.